**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 113/2012**

**PW1 – திரு. மூர்த்தி, த/பெ. ஆசிர்வாதம்**
**20.11.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் . 15.55 மணி</u>**

நான் பிராதில் கூறிய B Schedule உள்ள கேட்டினமல்லி கிராமத்தில் உள்ள 36 செண்ட் நிலத்தை நானும் என் தங்கை அன்புச்செல்வியும் சேர்ந்து 20.09.2006 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் தம்பித்துரை என்பவருக்கு கிரையம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் நானும் ஒரு தரப்பினா் என்றால் சரிதான். **20.09.2006 தேதியிட்ட கிரைய ஆவணம் பி.வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதைப்போல் மாதவரம், அய்யப்பன் நகரில் உள்ள ஒரு வீடு மற்றும் மனை இரண்டையும் சேர்த்து 12.02.2007 அன்று என் பெயரில் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவியின் நகையை விற்று வாங்கினேன். மேற்படி ஆவணத்தில் கிரைய தொகை <u>ரூ.8,90,000/</u>- என் தந்தை காசிராஜன் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் தான் நகையை விற்று என் தந்தையிடம் அந்த பணத்தை கொடுத்தேன். என் தந்தை தான் பத்திரம் செய்தாா். என் தங்கையும் பத்திரம் எழுதும் போது உடன் சேர்ந்து சென்றாா். **12.02.2007 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என் சாட்சியத்தில் 1975 முதல் 1986 வரை என் தாயாா் கேட்டினமல்லி கிராமத்தில் சொத்துக்களை வாங்கினாா் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும், அந்த சொத்துக்கள் எல்லாம் நான் தொழில் செய்து சம்பாதித்துக்கொடுத்து வாங்கிய சொத்துக்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

அதைப்போல் என் தாயார் வாங்கிய சொத்துக்களில் உள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் தாயார் தான் சென்று பத்திரம் செய்தார். என் தாயார் இறந்த பிறகு என் தந்தையும் என் தங்கையும் நானும் சேர்ந்து விற்ற கிரைய ஆவணத்தில் நான் தான் சம்பாதித்து கொடுத்த பணத்தில் தான் வாங்கிய சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, என் தந்தை தான் குடும்பத்தை பார்த்து வந்தார். நான் சம்பாதித்த பணத்தை என் தந்தையிடம் தான் கொடுத்தேன். என் பிராது E Schedule சொத்தில் ஆற்காட்டில் உள்ள சொத்தை நான் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்து யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் என் தங்கையின் கணவர் அவருடைய தாயாரின் பெயரில் எழுதி வாங்கினார். அவர் தாயார் பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை. என் தங்கை கணவரின் தாயார் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் உயிருடன் இல்லை. இறந்துபோன என் தங்கை கணவரின் தாயார் இந்திராணிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பேர் உள்ளார்கள். அதில் அவர் மகன் சங்கரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன், மற்ற இரண்டு பேரை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சங்கர் தான் என்னிடம் ஒரு லட்சம் ரூபாய் வாங்கியதால் அவரை மட்டும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். இந்திராணியின் சொத்துக்கு அவரது மகள்களும் வாரிசுகள் என்றால் அவருடைய தகப்பனாரை தான் கேட்க வேண்டும். நான் சொல்வது போல் இறந்துபோன இந்திராணிக்கு 3 வாரிசுகள் என்றாலும் 3 பேரும் பிராதில் E Schedule சொத்துக்கு வாரிசுகள் என்றால் சரியல்ல. அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தங்கை கணவர் ஆற்காடு சொத்தை எந்த வருடம் அவருடைய தாயார் பெயரில் வாங்கினார் என்றால் 1988ம் வருடம் என்று நினைக்கிறேன். 1988ம் வருடம் என்னுடைய மாத வருமானம் என்ன என்றால் எனக்கு பல வழிகளில் வருமானம் வரும். பால் வியாபாரம், விறகு வியாபாரம் மற்றும் கம்பெனிக்கு செல்வேன், அதன் மூலம் வருமானம் வந்தது. 1988ம் வருடம் எனக்கு, என் தங்கை கணவர் சங்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. என் குறுக்கு விசாரணையில் கே.சி.கார்டன் சொத்தை பொறுத்து என் பெயரில் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கூறியுள்ளேன், தற்போது என்னிடம் காட்டப்படுவது அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் எனக்கு தெரியாது. நான் கே.சி.கார்டன் சொத்து பற்றி

சென்னை நகர 16வது நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.649/2008 என்ற வழக்கை என் தந்தையார் பெயரில் தாக்கல் செய்து அந்த வழக்கு 2010ம் வருடம் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அப்பா, பிள்ளை வழக்கு என்று நீதிபதி தள்ளுபடி செய்தார். **அசல் வழக்கு எண். 649/2008 என்ற வழக்கில் கொடுக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் என் தாயார் கொடுத்த பணத்தை வைத்து வாங்கிய சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காமல் என் தங்கை மற்றும் அவர் கணவர் வாங்கிய சொத்துக்களை மட்டும் இந்த வழக்கில் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு சீதனமாக கள்ளிக்குப்பம் ஊரில் எதுவும் சொத்து உள்ளதா என்றால் உள்ளது. நான்கு மகள்களுக்கும் பிரித்து கொடுத்துள்ளார்கள். அந்த கள்ளிக்குப்பம் இடத்தில் கடைகளும், வீடும் என் செலவில் நான் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயார் சொத்தை விற்ற பணத்தை வைத்து கள்ளிக்குப்பம் பகுதியில் ஒரு வீடும் இரண்டு கடைகளும் கட்டினேன் என்றால் சரியல்ல. நான் டன்லப் கம்பெனியில் இருந்து எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் 2017ம் வருடம் ஓய்வு பெற்றேன். டன்லப் கம்பெனியை எந்த வருடம் மூடினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>நேரம் 16.30 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.